

கழக இளைஞர்அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



கழக இளைஞர்அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கழக முன்னணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. குப்பையும்...விஷப்பாம்பு பா.ஜ.க.வும்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் குட்டிக்கதை!

தஞ்சாவூர், ஆக. 27-

அ.தி.மு.க. என்ற குப்பையை ஒழித்தால்தான் விஷபாம்பு என்ற பா.ஜ.க.வை ஒழிக்க முடியும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். தஞ்சாவூர் திலகர் திடலில் தஞ்சாவூர் மாவட்ட வடக்கு - மத்திய - தெற்கு தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தலைமையில் நடந்தது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: கடந்த 20ம் தேதி தமிழ்நாடு முழுவதும் நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்தப்பட்டது. இந்த போராட்டத்திற்கு அ.தி.மு.க.விற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.



ஆனால் நீட் தேர்வை எதிர்ப்போம் என சொல்லிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க., இதற்கு ஆதரவு தரவில்லை. நீட் தேர்வை எதிர்ப்போம் என சொல்லி கொண்டிருக்கும் அ.தி.மு.க. வுடன் கூட்டணியில் இருக்கும் பா.ஜ.க.வை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது. 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அடிமைகளை விரட்டி அடிப்போம். அப்போது உதயநிதி ஸ்டாலின் ஒரு குட்டிகதை சொன்னார். ஒரு வீட்டிற்கு அடிக்கடி விஷபாம்பு வந்து கொண்டிருந்தது. அதனை அடித்து வெளியே போட்டாலும், மீண்டும் மீண்டும் வீட்டிற்குள் வந்தது. வீட்டிற்கு வெளியே வந்து பார்த்த போது தான் குப்பை கிடந்தது தெரியவந்தது.

குப்பைக்குள் ஒளிந்து கொண்டு தான் பாம்பு வீட்டிற்குள் வந்திருக்கிறது. குப்பையை ஒழித்தால்தான் பாம்பை ஒழிக்க முடியும். அதேபோல் வீடு என்பது தமிழ்நாடு. குப்பை என்பது அ.தி.மு.க. விஷப்பாம்பு பா.ஜ.க.. எனவே அ.தி.மு.க. என்ற குப்பையை ஒழித்தால் தான் விஷப்பாம்பு என்ற பா.ஜ.க.வை ஒழிக்க முடியும். 2021ம் ஆண்டு தேர்தலில் தமிழகத்தில் இருந்த அடிமைகளை துரத்தி அடித்தது போல், 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அடிமைகளையும், அவர்களின் எஜமானர்களையும் துரத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு

# 3 சட்ட மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் சூட்டுவதா?

## தயாநிதி மாறன் எம்.பி.கடும் எதிர்ப்பு!

டெல்லி, ஆக. 27-

ஒன்றிய அரசு 3 சட்ட மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் சூட்டியுள்ள தற்கு தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மசோதாக்களுக்கு இந்திப் பெயர் வைத்துள்ளதற்கு நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எதிர்ப்பு தெரிவித்தார். அதன்படி, இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், சாட்சிய சட்டத்துக்கு பதில் புதிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 சட்டங்களுக்கு பதில் பாரதிய நகரிக் சுரக்சா சன்ஹிதா, பாரதிய நியாய சன்ஹிதா,



சாட்சிய மசோதா என பா.ஜ.க. பெயர் வைத்துள்ளது. ஒன்றிய அரசு சட்ட மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் வைத்துள்ளது அரசியலமைப்பு சட்டப் பிரிவு 348க்கு எதிரானது.

நாடாளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் 36 மசோதாக்கள் பற்றி உள்துறை செயலாளர் அஜய் பல்லா விளக்கிக் கூறினார் என்று தயாநிதி மாறன் குறிப்பிட்டார். தொடர்ந்து, 3 மசோதாக்களில் உள்ள குறைகள், இந்தி பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் 3 பக்க கடிதத்தையும் தயாநிதி மாறன் அளித்தார். இந்தி பேசாத தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது இந்தியை திணிக்கும் மசோதாக்களை எதிர்ப்பதாக தயாநிதி மாறன் கூறியுள்ளார். கருணை மனுக்கள் மீது குடியரசுத் தலைவர், ஆளுநர்கள் முடிவெடுக்க காலக்கெடு விதிக்காததற்கும் தயாநிதி மாறன் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.


